Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

எல்லா கிறிஸ்தவ புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்!





பழைய பாடல்கள்
புதிய இசையில்..

காப்பார் உன்னை காப்பார்..
தொல்லை கஷ்டங்கள்..
ஆதாரம் நீர்தானய்யா..
சோர்ந்து போகாதே..
பாடுவேன் பரவசமாகுவேன்..




Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# எக்காளம்

VOL . 6 ISSUE . 2 தனிப்பிரதி ரூ 20/- செப்டம்பர் 2012







நிஜா கென்னடி

**கர்த்தர் பெரியவரும், மிகவும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார். எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது** (1 நாளாகமம் 16:25,34). கர்த்தர் புகழ்ச்சிக்கும், பாராட்டுக்கும், கனத்துக்கும் மகிமைக்கும் உரியவர். உலகிலுள்ள அனைத்து தெய்வங்களும் கையினால் உண்டாக்கப்பட்ட சிலைகள். வானத்தையும், பூமியையும் உண்டாக்கினவர் கர்த்தர். ஜீவனுள்ள தேவன், இரக்கமுள்ளவர், அன்புள்ளவர். அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்பவர்.

துதிப்பது என்பது தேவனுடைய தனிப் பண்புகளையும், இயல்புகளையும் உறுதியாக அறிக்கை செய்வது. அவரது பண்புகளையும், குணாதிசயங்களையும் அடையாளம் கண்டுகொண்டு, அது உண்மையானது என்று கூறுவது. அதை விடாமல் பிடித்துக்கொண்டு நாம் துதிக்கும்போது, பல நன்மைகளைப் பெறுகிறோம். நாம் கர்த்தரை காணாமல் விசுவாசித்து, அவரது நாமங்களையும், நற்குணங்களையும் நாவினால் அறிக்கை செய்கிறோம். நாம் துதிக்கும்போது, நமது சிந்தனைகளிலிருக்கும் நமது பிரச்சனைகளையும், தேவைகளையும் ஒதுக்கி தள்ளிவிடுகிறோம். நமது கவனம் முழுவதும் தேவனுடைய வல்லமையிலும், இரக்கத்திலும், அன்பிலும், நற்பண்புகளிலும், மேன்மையிலும் இருக்கவேண்டும். நாம் உள்ளார்ந்த மனதோடு கர்த்தரைத் துதிக்கும்போது, அவருக்கு மாத்திரமே மகிமை செலுத்துகிறோம்.

தாவீது கர்த்தரை புகழ்ந்து, தொடர்ந்து துதித்துக்கொண்டேயிருக்கவும், அவருக்கு நன்றி செலுத்துவதற்கும் லேவியரை நியமித்தான். நாமும் கர்த்தரைத் துதித்து, அவருக்கு எப்பொழுதும் நன்றி செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். ஆலயத்திற்கு செல்லும் போதும், விசேஷ நாட்களில் மட்டுமல்ல, எப்பொழுதும் துதிக்க வேண்டும். கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லவேண்டும். அதை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, அவரை மகிமைப்படுத்த வேண்டும்.

இஸ்ரவேலரை கர்த்தர் எகிப்தின் அடிமைதனத்திலிருந்து கானான் தேசத்திற்கு வழிநடத்திச் சென்ற போது, எகிப்தியர் அவர்களை பின்தொடர்ந்தனர். முன்னே செங்கடல், இருபுறமும் மலைகள். கர்த்தர்



செங்கடலை இரண்டாகப் பிளந்து வழி உண்டாக்கினார். மோசேயும், ஜனங்களும் கர்த்தர் தங்களுக்கு செய்த அற்புதத்தை நினைத்து இப்படியாக அவரைத் துதித்துப் பாடினார்கள்: **கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களை செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?** (யாத்திராகமம் 15:11).

அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாதபடி, அதைச் சுற்றிலும் உயரமான, அகலமான மதில் கட்டப்பட்டிருந்தது. ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதுகையில்,



ஜனங்கள் தேவனை துதித்துக்கொண்டே தேசத்தை சுற்றிவந்தபோது மதில்கள் இடிந்து விழுந்தது. உடனே ஜனங்கள் அத்தேசத்திற்குள் சென்று அதைப் பிடித்தார்கள். அப்படிப்போல நீங்களும் துதிக்கும்போது, உங்கள் வாழ்க்கையில் உள்ள எரிகோ கோட்டை போன்ற தகர்க்க முடியாத காரியங்கள் தகர்ந்துபோகும்.

கர்த்தர் தம்மை துதிப்பதற்காகவே மனிதனை உண்டாக்கினார். நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவரைத் துதிக்கும் போது, அவருடைய பிரசன்னம் கடந்து வரும். நாம் பாவம் செய்யும் போது, தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு துண்டிக்கப்படுகிறது. தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும்போது, அவரிடமிருந்து வரும் ஆசீர்வாதத்தையும் இழந்து போகிறோம். தேவன் புசிக்கக்கூடாது என்ற கனியை ஆதாம், ஏவாள் புசித்ததால், பாவம் செய்தனர். தேவனுக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு துண்டிக்கப்பட்டது. அதனால் தேவன், மனிதன் செய்த பாவத்திற்காக தன் சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்து மனிதர்களுடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தி தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

நாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கிறோம். தினமும் ஜெபிப்பதன் மூலமாகவும் வேத வார்த்தையைப் படிப்பதன் மூலமாகவும் தேவனோடு ஐக்கியம் கொள்கிறோம். நாம் தினமும் துதிப்பதன் மூலம் அவரை நோக்கிப் பார்க்கிறோம். அவரைக் கிட்டிச் சேருகிறோம். அவரோடுகூட பேசுகிறோம். **அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்** (சங்கீதம் 100:4). நாம் நன்றி நிறைந்த உள்ளத்தோடு தினமும் அவரைத் துதிக்கவேண்டும். துதிக்கும் போது அவர் மீதுள்ள ஆழமான அன்பையும், நட்பையும் பெற்றுக் கொள்கிறோம். நாம் அவரைப் போற்றி துதிக்கும்போது, நாம் மண் என்பதை நினைவு கூறுகிறோம். மனமேட்டிமை, பெருமை, விக்கிரக ஆராதனை நம்மை விட்டுப்போகும், தாழ்மை வரும்.

**ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்**

**கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது** (ஏசாயா 6:1). ஏசாயா தீர்க்கதரிசி தரிசனத்தில் கர்த்தரைப் பார்த்தான். கர்த்தருடைய முக்கியத்துவத்தையும், பெரிய தோற்றத்தையும் வல்லமையையும் கண்டு வியப்படைந்தான். சேராபீன்கள் (தேவ தூதர்கள்) தேவ சமூகத்தில் கர்த்தரை போற்றிப்பாடி ஓயாமல் துதித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: **சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்** (ஏசாயா 6:3). பரிசுத்தமான ஆண்டவரை ஏசாயா பார்த்ததும், தான் எப்படிப்பட்டவன் என்பதை உணர்ந்து கொண்டான். பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக நிற்க தான் தகுதியற்றவன், தான் ஒரு பாவி, அசுத்த உதடுள்ளவன் என்பதை ஒத்துக் கொண்டான். கர்த்தர் சர்வ வல்லமையுள்ள தேவன். சிறப்பான ஆற்றல்களையுடையவர், வல்லமையும், பராக்கிரமுள்ள தேவன் நாமும் கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை அறிந்து கொள்ளும்போது, நாம் ஒன்றுமில்லாதவர்கள், பாவிகள் என்பதை உணர்ந்து அவருக்குமுன் நம்மை தாழ்த்துவோம். நம்மிடம் பாவம் இருந்தால் அறிக்கையிட்டு மனந்திரும்பி பரிசுத்த உள்ளத்தோடு அவரைத் துதிப்போம்.

## துதி உயர்த்தும்

தாவீது கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன், அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும் என்று சொல்லுகிறான். அவன் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, கர்த்தரை துதித்து, ஆராதித்துக் கொண்டிருந்தான். கர்த்தரோடுகூட ஐக்கியமாய் இருந்தான். கர்த்தர் அவனோடுகூட இருந்தார்.

கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை கர்த்தர் அழைத்துக் கொண்டு வந்து தமது ஜனமாகிய இஸ்ரவேலரை ஆளும்படியாக ராஜாவாக தெரிந்தெடுத்து அபிஷேகம் பண்ணினார். கர்த்தரை துதித்ததினால் அவனுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் கிடைத்தது. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன் என்று பாடுகிறான். கர்த்தரை தன் மேய்ப்பர் என்றும், தன்னுடைய தேவைகளை எல்லாம் சந்திப்பார், ஒரு நன்மையும் குறைவுபடாது என்றும் சொல்லுகிறான்.

சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணும்படி, தாவீதின் தகப்பனாகிய ஈசாயையும், அவன் குமாரரையும் விருந்துக்கு அழைத்தான். ஆனால், ஈசாவோ தாவீதைத் தவிர மற்ற எல்லா குமாரரையும் அழைத்து வந்தான். தாவீதோ ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அவன் தகப்பன் அவனை மறந்தாலும் கர்த்தர் அவனை மறக்கவில்லை. கர்த்தர் அவனை அழைத்து ராஜாவாக்கினார். பிரியமானவர்களே! மனிதர்கள் உங்களை புறக்கணிக்கிறார்களா? ஒதுக்கி வைக்கிறார்களா? கவலைப்படாதீர்கள். இந்த உலகத்தை உண்டாக்கின சர்வவல்லமையுள்ள தேவன் உங்களோடுகூட இருக்கிறார். தாவீது ராஜாவைப்போல கர்த்தரைத் துதித்து, அவரோடுகூட ஐக்கியமாய் இருங்கள். உங்கள் சத்துருக்கள் வெட்கப்பட்டுப்போகும்



படியாக கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

## துதியினால் விடுதலை

குறிசொல்ல ஏவுகிற ஆவியை கொண்ட ஒரு பெண், குறிசொல்லி, தன் எஜமான்களுக்கு மிகுந்த பணத்தை சம்பாதித்துக் கொண்டிருந்தாள். அவள் பவுலையும், சீலாவையும் பின் தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படியே பல நாட்கள் தொடர்ந்து செய்து வந்தாள். பவுல் கோபம் கொண்டு, அவளுக்குள் இருந்த அசுத்த ஆவியைப் பார்த்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால், இவளைவிட்டு புறப்படும்படி கட்டளையிடுகிறேன் என்றான். உடனே அசுத்த ஆவி வெளியேறியது. அப்பெண்ணின் எஜமான்கள், இவளை வைத்து இனி பணம் சம்பாதிக்க முடியாது என்று கண்டு கொண்டனர். அவர்கள் பவுலையும், சீலாவையும் அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு போனார்கள். யூதர்களாகிய இம்மனிதர்கள் நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணி, ரோமர்களாகிய நமக்கு தகாத காரியங்களை போதிக்கிறார்கள் என்றார்கள். அந்த அதிகாரிகள் அவர்கள் ஆடைகளை கிழித்து, அவர்களை அடித்து சிறையிலிடும்படி கட்டளையிட்டார்கள். அவர்கள் பவுலையும், சீலாவையும் அநேக அடிகள் அடித்து, அவர்கள் கால்களை தொழுமரத்தில் கட்டி உட்காவலறையில் அடைத்தார்கள்.

**நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்** (அப்போஸ்தலர் 16:25). திடீரென்று



சிறைச்சாலை அஸ்திபாரங்கள் அசையும் படியாக பூமியதிர்ச்சி வந்தது. பின் சிறைச் சாலை கதவுகள் திறந்தன. எல்லாருடைய விலங்குகளும் கழன்று போயிற்று. சிறைச்சாலைக்காரன், சிறையின் கதவுகள் திறந்திருப்பதைப் பார்த்து, கைதிகள் தப்பித்து போயிருப்பார்கள் என பயந்து தற்கொலை செய்ய இருந்தான். பவுல் அதைக்கண்டு, நாங்களெல்லோரும் இங்கேதான் இருக்கிறோம், நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே என்றான். இதன் மூலமாக சிறைச்சாலைக்காரனுக்குள் ஒரு மாற்றம் வந்தது. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பினான். பவுலும், சீலாவும் கர்த்தருடைய வசனத்தை போதித்தபோது, அவனும், அவன் வீட்டாரனைவரும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிப்பை பெற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

பவுலும், சீலாவும் சரீரத்தில் அடிபட்ட வேதனையோடு, கால்கள் இரண்டும் மரத்தில் கட்டப்பட்ட வண்ணம் காவலில் இருந்தார்கள். அந்த பாடுகள், சரீர வேதனைகள் மத்தியிலும், கர்த்தரை நோக்கி

ஜெபித்தார்கள். துதித்து பாடினார்கள். கர்த்தரை குறைசொல்லவோ, முறுமுறுக்கவோ, அவிசுவாசமாக பேசவோ இல்லை. உபத்திரவத்தை பொறுமையோடு சகித்தார்கள். கர்த்தருக்குள் சந்தோஷமாக இருந்தார் கள். அவர்கள் இருதயத்தின் ஆழத்தி லிருந்து கர்த்தரை துதித்தபோது கதவுகள் திடீரென்று திறந்தது. கட்டுகள் தானாய் கழன்று விழுந்தது. நம்முடைய வாழ்க்கையிலும் நாம் துதிக்கும் போது அற்புதங்கள் நடக்கும். சாத்தானின் கட்டுகள் விலகிப் போகும்.

இக்கட்டான வேளையில் இருதயத்தின் ஆழத்திலிருந்து, உண்மையாய் கர்த்தரை துதிக்கும்போது வழிகள் திறக்கும். நாம் நடக்காது என்று நினைக்கும் காரியங்கள் நடக்கும். கர்த்தருடைய வல்லமை வெளிப்படும். இரக்கமற்ற கடின இருதயங்கள் மாறும். மனித பார்வையில் நடக்க முடியாத காரியங்கள் முடியும். இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் கர்த்தர் கிரியை செய்வார். பணப் பற்றாக்குறையின் நிமித்தமாக ஒரு காரியமும் செய்யமுடியாதபடி கட்டப்பட்ட நிலைமையில் இருக்கிறீர்களா? பவுலையும், சீலாவையும்போல கர்த்தரை துதியுங்கள். நீங்கள் நினைப்பதற்கும், வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாய், நீங்கள் ஆச்சரியப்படும் விதத்தில் கர்த்தர் உங்கள் தேவைகளை சந்திப்பார். உங்கள் பிள்ளைகளோ, கணவரோ, மனைவியோ, கர்த்தருக்கு பிரியமில்லாத வழியில் செல்கிறார்களா? சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் யாரை மாற்ற முடியவில்லை என்று நினைக்கிறீர்களோ, அவர்கள் இருதயத்தை கர்த்தர் மாற்றிப்போடுவார். எந்த நிலைமையையும் கர்த்தரால் மாற்ற முடியும். நீங்கள் நினைத்த திட்டமிட்ட காரியங்கள் நடக்கவில்லையா? ஒரு காரியத்தைச் செய்ய கடினமாக உள்ளதா? கர்த்தர் உங்களுக்காக அதை செய்து கொடுப்பார். அதைக் கையாள கிருபையைத் தருவார். உபத்திரவங்கள், துன்பங்கள், போராட்டங்கள், நெருக்கங்கள் வரும்போது முறுமுறுக்கிறோமா? வேதனையோடு அழுது புலம்புகிறோமா? துக்கத்தோடு இருக்கிறோமா? என்ன நிந்தனைகள் வந்தாலும், பவுலையும், சீலாவையும்போல கர்த்தரைத் துதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. தேவனால் எல்லாம் முடியும் என்பதை உணர்ந்து, அவரைப் போற்றி துதிக்கும்போது காரியங்கள் இலகுவாய் முடியும்.

**துதியினால் வெற்றி**

யூதா தேசத்தின் ராஜாவாகிய யோசபாத்துக்கு எதிராக மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடேகூட சேயீர் மலை தேசத்தாரும் யுத்தம்பண்ண வந்தார்கள். அதை யோசபாத் கேட்டபோது, பயந்து என்ன செய்யவேண்டும் என்று கர்த்தரிடம் கேட்டான். தன் தேசத்திலுள்ள எல்லோரும் உபவாசம் இருக்க ஒரு நேரத்தைக் குறித்தான். எல்லா ஜனங்களும் ஒன்றாகக்கூடி கர்த்தரைத் தேடினார்கள். கர்த்தர் தங்களுக்கு உதவி செய்யும்படி கேட்டனர்.

யோசபாத் கர்த்தரை நோக்கி இப்படியாக விண்ணப்பம் பண்ணினான்: **எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்: தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்: உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமும் இருக்கிறது,**



**ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது** (2 நாளாகமம் 20:6). கர்த்தரை புகழ்ந்து, அவர் எவ்வளவு பெரியவர் என்பதையும், அவரது ஆற்றல்களையும், வல்லமையையும் எடுத்துச் சொல்லி, அவரைத் துதித்து மகிமைப்படுத்துகிறான். தன் பிதாக்களுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தங்களை விசுவாசித்து, அதை தன் வாயினால் அறிக்கை செய்கிறான். நீர்தான் இந்த தேசத்தை எங்களுக்கு சுதந்திரமாகக் கொடுத்தீர். இந்த தேசத்திலிருந்து எங்களை துரத்திவிட வருகிறார்கள். நீர் அவர்களை நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு எதிராக வரும் இந்த கூட்டத்தை எதிர்க்க எங்களுக்கு பலமில்லை. என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது. நீர்தான் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஜெபித்தான். ஆபத்தான நேரத்தில், தேசத்து ஜனங்கள் ஒன்றாகக்கூடி, உபவாசித்து ஜெபிக்கும்படி கூறுகிறான். ஜனங்களெல்லாரும் தங்கள் வேலையை விட்டு, சாப்பிடாமல் உபவாசித்து ஜெபித்து, கர்த்தருடைய சித்தத்துக்காக காத்திருந்தார்கள்.

லேவியனாகிய யாகாசின் மூலமாக கர்த்தர் அவர்களோடுகூட பேசினார். நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பை பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான் (2 நாளாகமம் 20:15,17). லேவியர் எல்லோரும் கர்த்தரை மகா சந்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். யோசபாத் ஜனங்களிடம் உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது வெற்றி பெறுவீர்கள் என்றான். யுத்தத்திற்கு செல்லும் படைக்கு முன்பாக பாடகர்களை நிறுத்தினான். அவர்கள் கர்த்தரை துதியுங்கள், அவர் கிருபை என்று முள்ளது என்று கர்த்தரை பாடி துதித் துக்கொண்டே சென்றார்கள்.

அவர்கள் பாடித் துதி செய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த, அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைதேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப் பண்ணினதால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள் (2 நாளாகமம் 20:22). அவர்கள் கர்த்தரை துதித்து பாடினபோது, எதிரிகளுக்குள்ளே கர்த்தர் சண்டையை உண்டுபண்ணினார். அம்மோன் புத்திரரும், மோவாபியரும் சேர்ந்து சேயீர் மலைதேசத்தார்மீது யுத்தம் பண்ணி, அவர்களை கொன்று போட்டார்கள். பின் அம்மோன்புத்திரரும், மோவாபியரும் அவர்களுக்குள்ளே போரிட்டுக் கொல்லத் தொடங்கினர். யூதா தேசத்தார் வந்தபோது, செத்துப்போன பிணங்களையே பார்த்தனர். ஒருவரும் தப்பவில்லை.

யோசபாத்தும் ஜனங்களும் மரித்தவர்களிடமிருந்து விலையுயர்ந்த பொருட்களையும் ஆடை ஆபரணங்களையும் கொள்ளையிட்டார்கள். கொள்ளையிட்டதை எடுத்துக் கொண்டு போகக்கூடாதிருந்தது. அது அவ்வளவு மிகுதியாயிருந்தது. அவர்கள் மறுபடியும் தங்கள் தேசத்திற்கு வந்து, கர்த்தர் தங்களுக்

குத் தந்த வெற்றிக்காக, கர்த்தரை துதித்து மகிமைப்படுத்தினார்கள். நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தர் செய்த நன்மைகளையும் நினைத்து நன்றி சொல்லி துதிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

யோசபாத் இக்கட்டான அந்த சூழ்நிலையை முற்றிலுமாக கர்த்தரிடம் ஒப்புக் கொடுத்தான். கர்த்தரால் மட்டுமே தேசத்தை பாதுகாக்கவும், காப்பாற்றவும் முடியும் என்பதை அறிந்து வைத்திருந்தான். கர்த்தரே சகல அதிகாரத்தையும் உடையவர், இப்பொழுது இருக்கிற சூழ்நிலையை மேற்கொள்ள கர்த்தரால் மட்டுமே முடியும் என்று விசுவாசித்து கர்த்தரை முழுமையாக சார்ந்திருந்தான். எதிரிகள், தனக்கு எதிராக வந்து கொண்டிருந்த போது, கர்த்தர் தனக்கு ஆதரவாயிருப்பார், துணை நிற்பார் என்று ஆறுதலடைந்தான். தன்னுடைய படைபலத்தையோ, தன்னையோ நம்பாமல், கர்த்தர்தான் விடுவிக்கமுடியும் என்பதை புரிந்து வைத்திருந்தான்.

நாம் கர்த்தருடைய வல்லமையையும், அவரால் என்ன செய்ய முடியும் என்பதிலேயேயும் நம் கவனத்தை செலுத்த வேண்டும். நம்முடைய பலத்தையும் செல்வாக்கையும் பார்க்கக்கூடாது. சூழ்நிலையைப் பார்த்து சோர்ந்து போகக்கூடாது. நம்முடைய தேவன் வல்லமையும் பராக்கிரமமுமுள்ளவர்.

நாம் கர்த்தரை முழுமையாய் சார்ந்து இருக்கும்போது, கர்த்தர் நமக்காக எதிரிகளோடு யுத்தம் செய்வார். அதனால் நமக்கு எதிராக இருப்பவர்களையும், செயல்படுகிறவர்களையும் பார்த்து நாம் கலங்கக்கூடாது. சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக எந்த மனுஷனும் எதிர்த்து நிற்கமுடியாது. உன்னைத் தொடுகிறவன் என் கண்ணின்மணியைத் தொடுகிறான் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் நமக்கு எதிராக வரவில்லை. கர்த்தருக்கு விரோதமாக வருகிறார்கள். பிரியமானவர்களே ஒருபோதும் கலங்காதீர்கள்.

எதிரிகள் உங்களுக்கு விரோதமாக கூட்டங்கூடி எதிர்த்து நிற்கிறார்களா? யோசபாத் ராஜாவைப்போல கர்த்தரை நோக்கி முறையிடுங்கள். கர்த்தர் உங்களுக்கு செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லுங்கள். வாக்குத்தத்தங்களை வாயினால் அறிக்கையிடுங்கள். கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை நினைத்து அவரைத் துதித்து பாடுங்கள். உங்கள் எதிரிகளுக்கிடையே கர்த்தர் சண்டையை உண்டாக்குவார். அவர்கள் சண்டையிட்டு ஒன்றுமில்லாமல் போவார்கள். ஏனென்றால் கர்த்தர் உங்களுக்காக எதிரிகளோடு யுத்தம் செய்வார். இந்த உலகத்தை உண்டாக்கின தேவனுக்கு எதிர்த்து நின்றால் எப்படியிருக்கும் என்று சற்று யோசித்து பாருங்கள். யோசபாத்தின் தேவன்தான் உங்கள் தேவன். நெருக்கமான வேளையில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவரையே சார்ந்திருங்கள். ஒருபோதும் மற்ற மனிதர்களையோ, உங்களின் திறமையையோ, பணபலத்தையோ நம்பாதீர்கள். கர்த்தரை நம்புங்கள்.

**துதியினால் பாதுகாப்பு**

தானியேல் ஜெபிக்கிறவனாய் இருந்தான். அவன் இடைவிடாமல் கர்த்தரை ஆராதிப்பதை அந்த தேசத்தின் ராஜாவே அறிந்து வைத்திருந்தான். தானியேலுக்குள் விசேஷித்த ஆவி



இருந்தமையால் தரியு ராஜா அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த நினைத்தான். அப்பொழுது பிரதானிகளும், தேசாதிபதிகளும் அவன்மேல் பொறாமை கொண்டு, அவன்மேல் குற்றச்சாட்ட காரணங்களை தேடினர். தானியேல் உண்மையுள்ளவனாய் இருந்தபடியால் அவன்மேல் குற்றம் கண்டுபிடிக்க ஒருவனாலும் முடியவில்லை. அதனால் முப்பது நாட்கள் ராஜாவைத் தவிர வேறு யாரையாவது வணங்கினால் சிங்கக்கெபியிலே போடப்படுவார்கள் என்ற சட்டத்தை கொண்டு வந்தார்கள்.

தானியேலோ இதை அறிந்திருந்தும் தான் முன் செய்துவந்தபடியே, தன் தேவனுக்கு முன்பாக, தினமும் மூன்று வேளையும் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான் (தானியேல் 6:10). அதனால் அவனை சிங்கக் கெபியில் போட்டார்கள். ராஜா அவனை நேசித்தபடியால், நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை தப்புவிப்பார் என்றான். கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயை கட்டிப்போட்டு தானியேலைக் காப்பாற்றினார். தானியேல்மேல் அநீதியாய் குற்றஞ்சாட்டினவர்களையும், அவர்கள் மனைவிகளையும், பிள்ளைகளையும் சிங்கக் கெபியிலே போட ராஜா கட்டளையிட்டான். சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டது. நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம். தீய காரியங்களைச் செய்ய ஒன்றாககூடி, செயல்படுகிறவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் குடும்பத்தாருக்கும், சந்ததிகளுக்கும் தண்டனை உண்டு. ராஜா தானியேலின் மூலம் உண்மையான ஜீவனுள்ள தேவனை அறிந்து கொண்டான்.



பிரியமானவர்களே, நீங்கள் வேலை பார்க்கும் இடத்திலும், உங்கள் குடும்பத்திலும் உங்கள் மேல் பொறாமை கொள்ளுகிறார்களா, வீண்பழி சுமத்துகிறார்களா? குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்களா? உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாய் இருக்கிறார்களா? உங்களுக்கென்று உதவி செய்ய யாருமே இல்லையா? தனித்து நிற்கிறீர்களா? எதிரிகள் உங்களுக்கு மேலே இருப்பவர்களிடம், உங்களைக் குறித்து அநீதியாய் குற்றஞ்சாட்டி, உங்கள்மேல் வெறுப்பை உண்டு பண்ணுகிறார்களா? கலங்காதீர்கள். தானியேலைப்போல இடைவிடாமல் தேவனை ஆராதியுங்கள். கர்த்தர் உங்களை எதிரிகளின் கண்ணிகளுக்கு விலக்கி பாதுகாப்பார். எதிரிகளின் வாயை அடைத்துப் போடுவார். தானியேலுக்கு எதிராக குற்றஞ்சாட்டினவர்கள் வாயை கர்த்தர் அடைத்தார். கர்த்தர் உங்களோடுகூட இருந்து உங்களுக்கும் உதவி செய்வார்.

கர்த்தருடைய கிருபை உங்களோடு இருப்பதாக, ஆமென்!



# ராஜ்யத்தின் சுதந்திரமும் வல்லமையும்

**ஏஞ்ஜலின் தீப்தி**

தேவனுடைய ராஜ்யம் என்பது பரலோகத்தின் விதிமுறைகள் நம்முடைய வாழ்வில் செயல்பட வைக்கும் வழியாகும். தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதென்பது, மறுபடியும் பிறத்தலுக்கும் மேலானதொரு வழியாகும். அது ராஜ்யத்தில் விதிமுறைகளை மிக அழுத்தமாக அமல் செய்வதை உள்ளடக்கியுள்ளது. மேலும் அதில் உட்பிரவேசிப்பவர்கள் தங்களுக்காக வைக்கப்பட்டுள்ள வல்லமையையும், பிரத்யேக சுதந்திரத்தையும் பெறத் தகுதியுள்ளவர்களாகிறார்கள். நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கும்போது என்ன நடக்கின்றது?

இயேசு தம்முடைய சீடர்களிடம் சொல்லுகிறார்: **நீங்கள் காண்கிறவைகளைக் காணுங் கண்கள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்றார் (லூக்கா 10:23,24). இயேசுவின் சீடர்கள், உவமைகளையும் மற்ற போதனைகளையும் அவரிடமிருந்து விளக்கக் கேட்டார்கள். மற்ற ஜனங்கள் அவற்றைக் கேட்டார்கள். ஆனால், அவர்களால் அவற்றை புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள், சத்தியத்தை கண்டார்கள். ஆனால், அதை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இருந்தபோதிலும், நிக்கோதேமுபோல தெரிந்தெடுக்கப்பட்ட மிகச் சிலர், இயேசுவின் போதனையை நுணுக்கமாகக் கேட்டவர்கள், வெளிச்சத்தைக் கண்டார்கள். தேவனுடைய ராஜ்யமும், அதின் பொக்கிஷமும் சாதாரணமானதும் அல்ல. மேலும் அது சாதாரண மனிதர்களுக்கு வெளிப்படுத்தப்படுவது அல்ல. தேவனுடைய ராஜ்யத்தின்படி வாழ்வதை வாஞ்சையோடு நாடுபவர்களும், அதை அமல்படுத்துபவர்களுமே அதற்கு தகுதியுடையவர்களாகிறார்கள்.

இயேசு வாக்குறுதி கொடுக்கிறார்: வெறுமனே விசுவாசி என்ற ஸ்தானத்திலிருந்து, ஊழியம் செய்வதற்கும், அவரோடு ஐக்கியம் கொள்வதற்கும் நாம் முன்னேறும்போது, நாம் மிக மிக முக்கியமான நபர்களாகிறோமென்று. இயேசு மறைந்துள்ள பொக்கிஷங்களையும் இரகசியங்களையும் நம்மை நம்பி கொடுக்கிறார். எப்படி ஒரு கூட்டு முறையிலான கம்பெனியின் முடிவுகளை எடுக்கும் உரிமை பிரத்யேகமான சிலருக்குக் கிடைக்கிறதோ அப்படிப் போல. இந்த உலகத்திலும், ஆவிக்குரிய உலகத்திலும் நடக்கப்போகும் காரியங்களை அவருடைய ஊழியக்காரர்களுக்கு தெரிவிக்கிறார். தேவன் சோதோம் கொமாராவை அழிக்கப்போவதை முன்கூட்டியே ஆபிரகாமுக்குத் தெரிவிக்கிறார். பூமியை இதுவரை பழக்கத்தில் இல்லாத வெள்ளத்தால் அழிக்கப்போவதை நோவாவிற்கு மாத்திரம் தேவன் தெரிவிக்கிறார். ராஜா தன் அந்தரங்க அறையில் பேசுவதை, தேவன் எலிசாவிற்கு வெளிப்படுத்துகிறார்.

நாமும் இப்படிப்பட்ட தேவ மனிதர்களைப்போல மாற ஆரம்பிக்கும்போது, தேவன் நமக்கு, நமக்கு அருகாமையிலுள்ளவர்கள், நண்பர்கள் மற்றும் கூடவேலை பார்ப்பவர்களின் வாழ்க்கையில் நடக்கப்போகும் காரியங்களை வெளிப்படுத்துவார். அது அவர்களுக்கு பக்தி விருத்தி உண்டாகவும், எச்சரிக்கை பண்ணவும், ஆறுதல்படுத்தவுமே. மேலும் அவர் தமது தீர்க்கதரிசிகளுக்கு மாத்திரமே, சமீபத்தில் நடக்கப்போகும் காரியங்களிலிருந்து, வெகு காலங்கள் கழித்து நடக்கப்போகும் காரியங்கள்வரை வெளிப்படுத்துவார். **அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக: பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை** (மத்தேயு 13:11).

தானியேல் தன்னுடைய வாலிபப் பிராயத்திலிருந்து மிகவும் ஒழுக்கமான முறையில் கர்த்தரைப் பின்பற்றினான். பாகாலின் சடங்காச்சாரங்களை மறுத்தான். அதினால் கர்த்தர் அவனுக்கு, எல்லாக் காரியங்களையும் புரிந்து கொள்ளத்தக்கதாக பத்து மடங்கு ஞானத்தைக் கொடுத்தார். தேவனுடைய ஆவி, அவனுக்குள் இருந்தது. எருசலேம் எவ்வளவு காலம் அடிமைத்தனத்தில் இருக்கும் என்பதை அறிந்து கொள்வதற்காக, எழுபது வார கால வருத்தத்தை தானியேல் தேவனிடம் கேட்டபொழுது, தேவன், இந்த பூமியின் கடைசி நாட்கள் வரையும், மனிதன் சொல்ல அனுமதியில்லாதக் காரியங்களையும் அவனுக்கு வெளிப்படுத்தினார். அப்படிப்பட்ட வெளிப்பாடுகளை தேவன் அவனுக்குள் பதித்து வைத்தார்.

கர்த்தர் நம்மை அபிஷேகம் மற்றும் வெளிப்பாடுகளின் உயர் நிலைக்கு உயர்த்த விரும்புகிறார். அவரோடு நெருங்கி நடக்க விரும்புகிறார். நமக்கு தேவையானதெல்லாம், தானியேலைப்போல, பவுலைப்போல, அதற்கான விலையை எடுத்து, கொடுக்கக்கூடிய விருப்பமே. அது நம்மை சார்ந்ததே. இயேசு நம் வாழ்வில் ஈடுபட்டிருக்கும் விதத்திலேயே திருப்தியாக

இருப்போமென்றால், அது அப்படியே நிற்கும். ஆனால், நம்முடைய வாழ்வின் எல்லாக் காரியங்களிலும் அவரைக் கொண்டு வந்தோமென்றால், நம்முடைய எல்லாக் காரியங்களின் ஆளுகையையும் அவருக்குக் கொடுத்தோமானால், அது சாத்தியப்படும். தேவன் அவருடைய வழியை கட்டாயப்படுத்துவதில்லை. **நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு** (உபாகமம் 30:19). தெரிந்து கொள்வது நமது கரத்திலே விடப்பட்டுள்ளது. **தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்** (யாக்கோபு 4:8) அவர், நாம் முதலாவது அடியை எடுத்து வைக்க விரும்புகிறார். அப்பொழுது அவர் நம்மிடத்தில் வருவார். **என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்** (எரேமியா 33:3). அவரைக் கூப்பிடுவது நமது பொறுப்பாகும். அவர் நிச்சயமாக பதில் கொடுப்பார். கூப்பிடுதல் என்பது ஒருநாள் காரியம் அல்ல. தொடர்ந்து அவரைக் கேட்கும்போது, தெய்வீக வெளிப்பாடுகளுடன் நாம் பதில் பெறுவோம். நெருப்பைப் போன்ற சோதனைகளையும், வேதனைகளையும் நாம் கடந்து செல்ல வேண்டிவரும். அது நம்மை தெய்வீக வல்லமையைப் பெற தயார்ப்படுத்துவதாகும். தமது ஊழியர்களுக்கு அதைக் கொடுக்க அவர் விருப்பப்படுகிறார். இது ஏனென்றால், சோதனையின் முடிவிலே நாம் முற்றிலும் வித்தியாசமான மனிதனாக, கர்த்தருடைய வேலை பரிபூரணமாக நம்மில் நிறைவேறினவர்களாக, அவருடைய வல்லமையை வெளிப்படுத்தும் சரியான பாத்திரமாக மாறவே.

***தெய்வீக வல்லமை நமக்கு தேவை. அது இல்லாமல் ஊழியம் செய்தால் நம்முடைய ஊழியம் வெற்றி பெறாது!***

இதற்கடுத்து நடப்பது, அவரைப் போலவே நாம் மாறுவதே. அவருடைய ஊழியர்கள் ஒரு இடத்திற்கு போவது என்பது, இயேசுவே அந்த இடத்திற்குப் போவதைப்போல. பிசாசுகள் அலறும், வியாதிகள் நீங்கும். பிசாசின் வேலைகள் அழிக்கப்படும். மரித்தவர்கள் உயிரோடு எழும்புவார்கள். **மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்** (யோவான் 14:12). இதுதான் அப்போஸ்தலருக்கு நடந்தது. அவர்கள் ஜெபத்திலும், உபவாசத்திலும் தரித்திருந்தார்கள். ஒரு நாள் மகத்துவான முறையில் அவர்கள் மீது இறங்கி வந்தார். இயேசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார். **பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்** (அப்போஸ்தலர் 1:8). பெந்தேகொஸ்தே நாளின்போது, பரிசுத்த ஆவி சீடர்களின்மீது பொழிந்தருளப்பட்டது.





அவர்கள் வல்லமையை பெற்றார்கள். அது தெய்வீக வல்லமையாகும். அது தேவனைப்போல காரியங்களைச் செய்ய அவர்களைத் தகுதிபடுத்தியது. அந்த வல்லமைதான், அவர்கள் பிரசங்கித்தபோது, கிறிஸ்துவை நோக்கி பல்லாயிரக்கணக்கானோரை இழுத்துக் கொண்டு வந்தது. அந்த வல்லமை, பரிசுத்த ஆவியின் வரங்கள் என்ற வடிவத்தில் இருந்தது. அந்த தெய்வீக வல்லமை நமக்கு தேவை. அது இல்லாமல் ஊழியம் செய்தால், நம்முடைய ஊழியம் வெற்றி பெறாது. இயேசுவிடமிருந்து வல்லமை எப்படி பறப்பட்டுப்போய் ஜனங்களைத் தொட்டதோ அந்த வல்லமையை நாம் பெறவேண்டும். அப்போதுதான் நம்மிலிருந்து வல்லமை புறப்பட்டு வரும்.

ஆவிக்குரிய ஏணியில் நாம் கடுமுயற்சி செய்து முன்னேறிச் சென்று, விசுவாசிகள் என்ற நிலையிலிருந்து அவரை அனுதினமும் தொடர்ந்து தேவ பிரசன்னத்தை அனுபவிப்போம். வல்லமையைப் பெறுவோம். அவரைப் போலவே ஊழியம் செய்வோம். ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் :** S.PAULRAJ KENNEDY

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா




1.தங்களுடைய அழுத்தமான உணர்ச்சியையும், யோசனையையும், கற்பனையையும், சிலர் கர்த்தர்தான் தங்களுடன் பேசுகிறார் என்று நினைத்துவிடுகிறார்கள். மற்றவர்களிடமும் கர்த்தர் தங்களிடம் பேசுவதாகச் சொல்லிவிடுகிறார்கள். இது மற்றவர்களை மாத்திரமல்ல, அவர்களையும் பாதிக்கும் காரியமாகும். அழுத்தமான உணர்ச்சி என்பது, நமது ஆத்துமாவிற்குள் இருக்கும் உணர்ச்சிகளிலிருந்து வருவதாகும். யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களைப் பற்றி ஏற்கனவே தெரிந்து வைத்திருப்போம். ஜெபிக்கப்போகிற அந்தவேளையில் மேலும் சில காரியங்களை நம்மிடம் சொல்லி இருப்பார்கள். அதை அடிப்படையாகவைத்து நமக்குள் ஏற்படும் உணர்ச்சியைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லிவிடக்கூடாது. மற்றொரு காரியம், அதேபோல அனுபவமுள்ள வேறொருவரின் வாழ்க்கையில் நடந்த காரியங்கள், நம்முடைய ஞாபகத்திற்கு வரும். அப்படித்தான் இவர்களுக்கும் நடக்கும் என்று நம் மனது அழுத்தமாக நமக்கு சொல்லும். அதை கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லிவிடக்கூடாது. சில சமயங்களில், நம் மனதில், கற்பனையாக, இவர்களுக்கு இந்த காரியம் இப்படி நடக்கலாம் என்று தோன்றும். அதையும் தீர்க்கதரிசனமாகச் சொல்லிவிடக் கூடாது. இப்படிப்பட்டக் காரியங்களைத் தவிர்க்க நாம் செய்ய வேண்டியது:

(1) நாம் அந்நிய பாஷையில் பேச வேண்டும் அல்லது ஒரு பாடலைப் பாடவேண்டும். நம் மனதை, உணர்ச்சிகளை(ஆத்துமாவை) கடந்து, நமது ஆவிக்குள் வரவேண்டும். அங்கேதான் பரிசுத்த ஆவியானவர் இடைபடுவார். நம் சுயத்தை மறக்கவேண்டும். அப்போதுதான் தேவ பிரசன்னம் வரும். (1 கொரிந்தியர் 14:2-4)

(2) கர்த்தருடைய வார்த்தையை, வேதத்தின் எந்த வார்த்தையை அடிப்படையாக வைத்து கர்த்தர் பேசுகிறார் என்று கர்த்தரிடம் கேட்கவேண்டும். தீர்க்கதரிசனம் அல்லது கர்த்தர் பேசுவது என்பது எப்போதும் வேதத்தின் வார்த்தையை வைத்தே இருக்கும்.

(3) கர்த்தர் பேசினால், நிச்சயமாக அது சமாதானத்தைத் தருவதாக இருக்கும். (கொலோசெயர் 3:15)

2. தீர்க்கதரிசனம் சொல்லவேண்டுமென்று நம்மை நாமே கட்டாயப்படுத்தக்கூடாது. கர்த்தர் ஏதாவது பேசினால், கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லவேண்டும். கர்த்தர் எதுவும் வெளிப்படுத்தாவிட்டால், கர்த்தர் எதுவும் வெளிப்படுத்தவில்லை



என்று சொல்லவேண்டும்(2 இராஜாக்கள் 4:27). ஏதாவது ஒரு தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்பதற்காக, கர்த்தர் சொல்லாமலே, நாமாக ஒன்றை யோசித்து, யூகித்து சொல்லக்கூடாது. அது அவர்களை(கேட்பவர்களை) மாத்திரம் அல்ல, சொல்லுகிற நம்மையும் பாதிக்கும்.

நாங்கள் நடத்துகிற ஜெபக் கூட்டத்திற்கு வரும் குடும்பமொன்று, வாரம் இரண்டு முறை என்னிடம் ஜெபிக்க வருவார்கள். அவர்களது கையில் செல்போனும், வாய்ஸ் ரெக்கார்டரும் வைத்து நான் சொல்லும் தீர்க்கதரிசனத்தை பதிவு செய்துகொள்வார்கள். ஆரம்பத்தில் கொஞ்ச நாள் எனக்கு இது பாரமாகத் தெரியவில்லை. சிறிது நாட்களுக்குப் பிறகு எனக்கு இது மிகுந்த பாரமாகிவிட்டது. அப்போது, அவர்கள் என்னை ஒரு தீர்க்கதரிசியாகப் பார்க்கவேண்டுமென்பது அவசியமில்லை என்பதை உணர்ந்துகொண்டேன். அவர்களுக்கு எதை, எப்பொழுது சொல்லவேண்டுமென்பதைக் கர்த்தர் அறிவார். நாம், முழுமையாக எல்லாவற்றையும் கர்த்தருடைய பாதத்தில் வைத்து விடவேண்டும். நாம் ஒன்றுமில்லை. நாம், கர்த்தருக்கும் அவர்களுக்குமிடையே ஒரு பாலம், அவ்வளவுதான். கர்த்தர் சொன்னால், சொல்வோம். (எரேமியா 23:9, 15,32/ எசேக்கியேல் 14:9-10/ எரேமியா 14:14-16)

3. கர்த்தர் நம்மோடு இடைபட, எப்போதும் நம் ஆவியில் விடுதலையோடு இருக்க வேண்டும். நாம் சோர்வுடன் இருக்கும்போது, தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது. ஏனென்றால், அப்போது கர்த்தர் நம்மோடு முழுமையாக இடைபடமுடியாது. அப்படியே கர்த்தர் நம்மோடு இடைபட்டாலும் நம்மால் சரியாக அவர் சொல்வதை உணர்ந்து கொள்ளமுடியாது. ஒருவேளை நம்மிடம் ஜெபிக்க வந்திருப்பவர்களுக்கு நிச்சயமாகவே ஒரு தீர்க்கதரிசன வார்த்தை அவசியம் என்ற சூழ்நிலை இருக்குமானால், கர்த்தர், அவர்கள் மீதுள்ள இரக்கத்தினால், நம் உணர்ச்சிகள், சூழ்நிலைகளையும் மீறி நம்மிடம் பேசுவார்.

4. யாராவது ஒருவர், ஆவிக்குரிய வாழ்க்கையில் இன்னும் முழுமையாக வளராதவர், நம்மிடம், கர்த்தர் இப்படிச் சொன்னார், அப்படிச் சொன்னார் என்று சொல்லும்போது, நாம் தாழ்வு மனப்பான்மையோ, குற்ற உணர்வோ கொள்ளத் தேவையில்லை. உண்மையிலேயே அவர்கள் கர்த்தருடைய சத்தத்தை, வெளிப்பாடுகளைப் பெறுகிறார்களா? என்று நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். வேதமும், ஜெபமும், ஆராதனையும் இல்லாதவனிடத்தில், கர்த்தர் நிச்சயமாக இடைபடமாட்டார். அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொல்லும் காரியத்தை கவனத்தில் வைத்துக்கொண்டு, அது நடக்கிறதா என்று காத்திருந்து பாருங்கள். மேலும், சொன்னதற்கு முரணாக அதன் பின்னர் சொல்லுகிறார்களா என்று பாருங்கள். சொன்னது நடந்தால், நிச்சயமாகக் கர்த்தர் அவர்களோடு இடைபடுகிறார். முன்னுக்குப்பின் முரணாகப் பேசினார்களென்றால், அது அவர்களாகப் பேசுவது. ஏனென்றால், தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே (யோபு 33:14). நிபந்தனையோடுகூடிய ஞானத்தைப் போதிக்கும் வசனம்(பரிசுத்த ஆவியின் வரம்) செயல்படுவது வேறு விதம். எசேக்கியா ராஜாவை மூன்று நாளில் எடுத்துக்கொள்வதும், நினிவே பட்டணத்தை அழிப்பதும் கர்த்தர் சித்தம் அல்ல. (2 இராஜாக்கள் 20:1-6, ஏசாயா 38:5, யோனா 3:4, 10)

- **தொடரும்**